an International CBSE Finger Print School
Coimbatore

# எழுத்துகளின் பிறப்பு

1.உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழுவது ________ ஆகும்.

2.எழுத்துகளின் பிறப்பு __________ என இருவகைப்படும்.

3.உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு தலை, கழுத்து, மூக்கு ஆகிய 4.நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே _________ என்பர்.

5.அ, ஆ ஆகிய இரண்டும் _______ திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.

6. இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் ________ அடி ஓரமானது மேல்வாய்ப்பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.

7.உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் ______ குவிப்பதால் பிறக்கின்றன.

8.க், ங் – ஆகிய இருமெய்களும் நாவின் முதற்பகுதி __________ அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.

9 ____, ______ ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி நடு அண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.

10. ____, _____ ஆகிய இருமெய்களும் நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.

11. ______, _____ ஆகிய இருமெய்களும் மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கின்றன.

12. ப்,ம் – ஆகிய இருமெய்களும் ________ பொருந்துவதால் பிறக்கின்றன.

13.ய் – இது நாக்கின் அடிப்பகுதி ________ அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது.

14. ர், ழ் – ஆகிய இருமெய்களும் மேல்வாயை ________ நுனி வருடுவதால் பிறக்கின்றன.

15. ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை ________ ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.

16. மெய்யெழுத்துகளில், வல்லின மெய் எழுத்துகள் ஆறும் ________ இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

17. மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் ________ இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

18. இடையின மெய் எழுத்துகள் ஆறும் ______ இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

19. ________ மெய் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கிறது.

20. ________ மெய் மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.

21. _________ மெய் மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

22. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ________.

23. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் _________.

24. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் __________.

25. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருத்துவதால் பிறக்கும் எழுத்துகள் __________.

26. கீழ் இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்துகள் __________.